029

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் (சிறப்பு) கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம்- 2022/2023

மட்டம் - 06

இறுதிப்பரீட்சை – 2022/2023

**SNU6221/ESU4121– ஆரம்பக்கல்வி**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 02.12.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் எவையேனும் தலா மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

## பகுதி – I

1. "அனைவருக்கும் கல்வி" என்ற பதத்தினை விளக்குக.
2. இலங்கையின் ஆரம்பக் கல்வி அடைந்த சாதனைகள் மூன்றினை பட்டியலிட்டு விளக்குக.
3. 1997 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட புதிய கலைதிட்டத்தில் காணப்படும் மூன்று (03) கற்றல் - கற்பித்தல் மூலங்களும் எவை? வரிப்படத்தின் உதவியுடன் அது எவ்வாறு முதன்மை நிலைகளில் மாறுபடுகின்றதென விளக்குக.
4. "பிள்ளைகளின் பங்கு பற்றலுக்கான உரிமை" என்பதனை விளக்குக.
5. ஆரம்ப வகுப்பு ஆசிரியர் கலைத்திட்டத்தை முகாமை செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய பிரதான காரணிகளைக் குறிப்பிடுக.
6. தரம் 03 மாணவனின் கணிதச் செய்கை கீழே தரப்பட்டுள்ளது. அவனது வழுவை விளக்குக. அந்த வழுவில் இருந்து மாணவனை விடுபடச் செய்ய எடுக்கக் கூடிய நடவடிக்கையை விளக்குக.

| | | | | |
|---|---|---|---|---|
| 37 | 96 | 54 | 81 | 40 |
| -18 | -29 | -36 | -17 | -13 |
| 21 | 73 | 22 | 76 | 33 |

7. முறைமைசார், முறைமைசாராக் கணிப்பீடு என்னும் பதங்களை வரையறுக்குக.
8. சேவைக் கால ஆசிரிய ஆலோசகரின் வகிபங்கினை பட்டியலிடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

09.

**a)** "தேர்ச்சிகள்" என்பதனால் நீங்கள் விளங்கிக் கொள்வது யாது? **(05 புள்ளிகள்)**

**b)** 1997 ஆம் ஆண்டு கலைத்திட்ட மறுசீரமைப்பினை விளக்குக. **(15 புள்ளிகள்)**

10.

**a)** பிள்ளைகள் கற்றலை கையகப்படுத்தும் முக்கிய நுட்பங்கள் பத்தினை (10) பட்டியற்படுத்துக.

**(06 புள்ளிகள்)**

**b)** நீங்கள் குறிப்பிட்ட நுட்பங்களில் ஏதாவது ஏழினை (07) தெரிவு செய்து அவற்றினை விளக்குக.

**(14 புள்ளிகள்)**

11.

**a)** பின்வரும் பதங்களை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(அ) கணிப்பீடு

(ஆ) மதிப்பீடு (06 புள்ளிகள்)

**b)** ஏன் கணிப்பீடு, மதிப்பீடு என்பன ஆரம்ப வகுப்புக்களில் முக்கியமானவை? (06 புள்ளிகள்)

**c)** செயலடைவுச் சேவையினூடான கணிப்பீடு என்பதனை விளக்குக. (08 புள்ளிகள்)

12.

**a)** ஆரம்பக் கல்வியின் தத்துவார்த்த அடிப்படைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

**b)** இலங்கை சமத்துவத்தையும் ஒப்புரவையும் பேணுவதில் எதிர்கொள்ளும் சவால்கள் எவை? (14 புள்ளிகள்)

13.

**a)** இலங்கையின் ஆரம்பக் கல்வியின் பிரதான சாதனைகள் **மூன்றினைக் (03)** குறிப்பிட்டு அவற்றினை விளக்குக. (08 புள்ளிகள்)

**b)** இலங்கையில் 1972 – 1997 வரையான காலப்பகுதியில் அமுல்படுத்தப்பட்ட கலைத்திட்டங்கள் ஆரம்பக் கல்வியில் ஏற்படுத்திய தாக்கத்தை விமர்சன ரீதியாக ஆராய்க. (12 புள்ளிகள்)

14.

**a)** ஆரம்ப பாடசாலையில் உதவும் ஆளணியினை பட்டியலிடுக. (05 புள்ளிகள்)

**b)** உதவும் ஆளணியின் வகிபங்கினையும் செயற்பாட்டினையும் விளக்குக. (15 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -